MediaLiteracyCouncilSG

www.betterinternet.sg



Organised by:

MEDIA LITERACY COUNCIL

Supported by:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

In association with:

SG:D | GET READY!



## சாமர்த்தியமாக இருங்கள்

# போலிச் செய்தி வகைகள்



## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடியுங்கள்

- **செய்தி தோன்றுவதற்கான அடிப்படை (மூலம்)** பற்றிக் கேள்வி கேளுங்கள்
- **தகவலை** உறுதிப்படுத்துங்கள்
- **நிபுணர்களுடன்** சரிபாருங்கள்

**CHECK Please!**

Be Safe. Be Smart. Be Kind.

# நம்புவதற்கு, சொடுக்குவதற்கு முன்னால் **தயவுசெய்து சரிபாருங்கள்!**

**கீழ்க்காணும் அறிகுறிகளைக் கண்டறியுங்கள். அப்போது போலிச் செய்திகளை இணையவெளியில் உங்களால் அடையாளம் காண முடியும்.**

## 01 மோசமான எழுத்து

பல போலிச்செய்திகள் மற்றும் கட்டுரைகள் எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகளோடு எழுதப்பட்டிருக்கும். ஒருகட்டுரையின் உள்ளடக்கத்தில் மட்டுமின்றி தளத்தின் பிற பக்கங்களிலும், குறிப்பாக 'எங்களைப் பற்றி', 'தொடர்புக்கு' ஆகிய பக்கங்களில் இப்பிழைகளை நீங்கள் காணலாம்.

## 02 சொடுக்குபொறி

தலைப்பில் 'ஆச்சரியமான' அல்லது 'நம்ப முடியாத' போன்ற சொற்களோடு உங்கள் கவனத்தை ஈர்க்கும் படங்களுடன் கட்டுரைகள் இருந்தால் அதனைச் சொடுக்காமல் இருப்பதே நல்லது. 'பொறி'யாக உருவாக்கப்பட்ட அந்த இணைப்பு விளம்பர நிதியை அதிகரிக்கும் உத்தியாகும். இணைப்பு சந்தேகத்திற்குரிய உள்ளடக்கம், ஆய்வுகள், தானே தரவிறக்கும் இடம், தலைப்புக்குப் பொருந்தாத உள்ளடக்கங்களுக்கு அந்த இணைப்பு கொண்டு செல்லலாம்.




## 03 மோசமான புகைப்படங்கள்

நியாயமான செய்தி எழுதுபவர் ஒருபோதும் திரிக்கப்படாத, அல்லது விகாரமான படத்தை, தும்முவதைப்போன்ற, உண்பதைப்போன்ற படத்தைப் பயன்படுத்த மாட்டார். அதற்கு பதிலாக தலைப்பு காட்டும் செய்திசார்ந்த படங்களை மட்டுமே பயன்படுத்துவார். இவ்வாறாக படங்கள் கட்டுரையுடன் இணைக்கப்பட்டிருப்பின், கட்டுரையாளரின் பிற கட்டுரைகளை, அவை காட்டும் கருத்துக்களின் கோணங்களை ஆராயவும்.

## 04 அநாமதேய எழுத்தாளர்கள்

சில சமயம், மிக ரகசியத் தகவலைப் பகிர்ந்து கொள்ளும்போது தன் அடையாளத்தை மறைக்க விரும்பும் கட்டுரையாளர் யார் என்று கட்டுரையிலிருந்து அறியமுடியாது. ஆனால், இது அரிது. பொதுவாக கட்டுரையின் மூலம் இல்லாவிட்டால் அது போலிச் செய்திதான். உண்மையான செய்தி எழுதுவோர் அவர்களுடைய நம்பகத்தன்மையை, பழைய கட்டுரைகளை நீங்கள் சோதித்துப் பார்க்க ஏதுவாக தங்களது பெயரை வெளிப்படையாக வெளியிடுவர்.

## 05 ஆதரவளிக்கப்பட்ட உள்ளடக்கம்

புதிய இணையத் தளங்களில், சமூக ஊடகங்க்ளில் ஆதரவளிக்கப்பட்ட உள்ளடக்கம் ஆதரவளிக்கப்படாத உள்ளடக்கத்தைப் போலவே காட்சியளிக்கும். அவை விளம்பரதாரர்களின் ஆதரவு பெற்றவையாக இருக்கும். எதையோ விற்க முயல்வதால் நிதியளிக்கப்பட்ட கட்டுரைச் செய்திகள் அனைத்துமே சார்புடையவை. 'ஆதரவளிக்கப்பட்ட', 'நிதியுதவியளிப்பவர்போன்ற சொற்றொடர்களை கவனிக்கவும்.

## 06 பரவல் காணொளி

பரவும் காணொளிகள் அனைத்துமே போலியானவை அல்ல. இருப்பினும், இணையவெளியில் பிரபலமாக இருக்கும் பல காணொளிகள் திசைதிருப்பக்கூடியவை. முழு உள்ளடக்கமும் இல்லாமல் அவை பதிவேற்றப்படுவதால், மக்களின் புரிதலைத் திசைதிருப்பி கருத்தாக்கத்தில்தவறான முடிவெடுக்க வைக்கும். பல காணொளிகள் விளம்பரம் செய்யும் நிறுவனங்களின் ஆதரவு அளிக்கப்பட்டவையாகவும் நிதியுதவி அளிக்கப்பட்டவையாகவும் உள்ளன.